# ஈழத்துப் புராண இலக்கிய மரபில் சீமந்தனி புராணம்

# Seemanthani Puranam in the Ealams' Puranic Literary Tradition

Kopalappillai Gukan

***Abstract***

*Puranam is a literary form that developed in Tamil as a result of the influence of vernacular literature. The ideas and stories of the eighteen Maha Puranas and the eighteen Upa Puranas, sung in the vernacular language to Pancha symbols, have been studied in Tamil literature since the late Sangam period. Purana developed as a distinct literary form in Tamil during the Chola period. During that time, many heterodox religious related puranics originated. In Eelam also there are Hindu, Christian and Islamic puranas, but most of them are Hindu. They have also been subjected to changes in terms of meaning from time to time. In that way, this study is about the Seemanthani Purana, which has not been paid much attention in the history of Eelam Tamil literature. It was written in 1884 by S. Bhubalapillai, who lived in Puliyandivu in Batticaloa District in Eastern Sri Lanka. This Purana is different from the Puranic literature of the Dutch period, though it has as its theme the Somavara Vratam. Seemanthani Purana has a completely different meaning even when looking horizontally at the Puranic literature that emerged in Eelam in the nineteenth century. In this case, this study describes the version, structure, content of the Seemanthani Purana, and thereby, the epic qualities, etc., and explains the differences between this Purana and the reasons for the differences from other Purana literature that originated in Eelam. This study emphasizes that mainly because the modernist changes that occurred in the nineteenth century did not occur in all regions of Eelam at the same time, there is no possibility of literary historical clarity within the generality of Eelam and that a regional approach is necessary when constructing the literary history of Eelam.*

***Key Words :*** S. Bhubalapillai, Seemanthani Purana, Somavara Vratham, Eelam Puranic Literature, Vrata Puranam, Epic Character

## அறிமுகம்

இந்து சமய மரபில் வேதங்களுக்கும் ஆகமங்களுக்கும் அடுத்த நிலையில் முக்கியத்துவம்பெறுபவை புராணங்கள் ஆகும். சர்க்கம், பிரதிசர்க்கம், வம்சம், வம்சானுசரிதம், மனுவந்தரம் என்னும் ஐந்து இலட்சணங்களுக்குட்பட்டுப் பாடப்பட்டுள்ள பதினெண் மகாபுராணங்களும் பதினெண் உபபுராணங்களும் இந்து சமயத்துக்கு ஆதரவான கடவுட் கோட்பாடு, தத்துவங்கள், வழிபாட்டு மரபுகள் போன்றவற்றைத் தொகுத்துக் கூறுகின்றன. வடமொழியில் செல்வாக்குப் பெற்றிருந்த புராண இலக்கியக் கருத்துக்களும் கதைகளும் சங்க காலத்தின் பிற்பகுதி தொடக்கம் பக்தி இலக்கியங்களில் பயின்று வந்துள்ளன. அப்பர், மாணிக்கவாசகர்,

திருமூலர் ஆகியோர் தங்கள் பதிகங்களைப் 'புராணம்' என்னும் பெயரால் குறிப்பிட்டுள்ளனர். இவ்வாறு பக்தி இலக்கியங்களுடாக அறிமுகமாகி சோழர் காலத்திலே தனியான ஓர் இலக்கிய வடிவமாக வளர்ச்சியடைந்த புராணம் அவைதிக சமயங்கள் சார்ந்தனவாகவும் தோற்றம் பெற்றன. ஆயினும் பெரும்பாலும் இந்து சமயக் கருத்துக்களையும் கதைகளையும் தாங்கும் ஓர் இலக்கிய வடிவமாகவே புராணம் நிலைபெற்றுள்ளது. மொழிபெயர்ப்புகளாக அல்லது தழுவல்களாக, மெய்யடியார் வரலாறு கூறுபவையாக, விரத மகிமை கூறுபவையாக, தல வரலாறு கூறுபவையாக இப்புராணங்கள் அமைந்தன.

ஈழத்து இலக்கிய வரலாற்றில் புராணம் என்பது முக்கியமான ஓர் இலக்கிய வடிவமாகும். காலத்துக்குக் காலம் பொருளடிப்படையில் மாற்றங்களுக்குட்பட்டு வந்துள்ள ஈழத்துப் புராண இலக்கிய மரபில் கிழக்கிலங்கையின் மட்டக்களப்பு மாவட்டத்தில் புளியந்தீவு என்னும் கிராமத்தில் வாழ்ந்த ச. பூபாலப்பிள்ளையால் (1856-1921) 1884 இல் இயற்றப்பட்ட சீமந்தனி புராணம் கவனத்திற் கொள்ளப்படாமையை அவதானிக்கலாம். இப்புராணம் பற்றிய தகவல்களை வி.சி.கந்தையா (1964:207-212), எப்.எக்ஸ்.ஸி.நடராசா (2012:117-121) ஆகியோர் தந்துள்ள போதிலும் இலக்கிய வரலாறு எழுதும் முயற்சியில் ஈடுபட்ட பலரும் அவற்றைக் கவனத்திற் கொள்ளவில்லை எனலாம். இந்நிலையில் தமிழில் புராண இலக்கியம் பற்றி எழுதிய ஈ. குமரன் சீமந்தனி புராணத்தை விரத புராணம் என்று வகைப்படுத்தியுள்ளார் (2010:432). ஒல்லாந்தர் காலத்தில் தோற்றம் பெற்ற விரத புராணங்களின் நோக்கம், பயன், பண்புகளிலிருந்து வேறுபட்ட இப்புராணம் பத்தொன்பதாம் நூற்றாண்டுப் புராண இலக்கியப் போக்கோடும் இயைபற்றதாகும். இந்நிலையில் சீமந்தனி புராணத்தை ஈழத்து இலக்கிய வரலாற்றில் கவனத்திற்கொள்ள வேண்டியதன் அவசியம் பற்றிய ஓர் அறிமுக ஆய்வு அண்மையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது(கோ.குகன்,2022). அவ்வாய்வு ஈழத்துப் புராண இலக்கிய மரபில் சீமந்தனி புராணத்தின் முக்கியத்துவத்தை மதிப்பிடப் போதுமானதல்ல. எனவே, 'புராண இலக்கியம்' என்ற நோக்கில் சீமந்தனி புராணத்தை ஆய்வுக்குட்படுத்துவதும், அந்த வகையில் ஈழத்துப் புராண இலக்கிய மரபில் சீமந்தனி புராணம் பெறும் முக்கியத்துவத்தை விளங்கிக்கொள்வதும் பயனுடையதாகும்.

ஈழத்து இலக்கியம் வரலாற்று போக்கில் ஏற்பட்ட அரசியல், சமய, சமூக மாற்றங்களின் பின்னணியில் உள்ளடக்க, உருவ மாற்றங்களைப் பெற்று வளர்ந்து வந்துள்ளது. இப்பின்னணியிலேயே ஈழத்துப் புராண இலக்கியங்களையும் ஆராய்தல்

வேண்டும். இந்த ஆய்வில் சீமந்தனி புராணத்தின் தோற்றமும் அதன் இயல்புகளும் ஈழத்துப் புராண இலக்கிய வரலாற்றுப் பின்னணியில் ஆராயப்படுகின்றன. இதன்மூலம் சீமந்தனி புராணம் ஏனைய ஈழத்துப் புராண இலக்கியங்களோடு இயைபுற்றுள்ள தன்மைகளையும், அதன் தனித்துவத்தையும் விளங்கிக்கொள்ள முடியும்.

**சீமந்தனி புராணம்**

சீமந்தனி புராணத்தை பரிசோதித்து பதிப்பித்தவர் வல்வை இயற்றமிழ் போதகாசிரியர் ச.வயித்தியலிங்கம்பிள்ளையாவார். 1894 இல் சீமந்தனி புராணம் முதன்முதலாகப் பதிப்பிக்கப்பட்டபோது காப்புச் செய்யுள் ஒன்றும் பாயிரச் செய்யுள் பத்தும் நீங்கலாக ஆரியவர்த்தச் சருக்கம், உற்பவச் சருக்கம், விரதச் சருக்கம், சந்திராங்கதச் சருக்கம், விவாகச் சருக்கம், சூழ்வினைச் சருக்கம், நிடதச் சருக்கம், நாகலோகச் சருக்கம், மீட்சிச் சருக்கம், பாவனைச் சருக்கம் ஆகிய பத்துச் சருக்கங்களில் 789 விருத்தப்பாக்கள் 96 பக்கங்களில் அச்சிடப்பட்டன. இது செய்யுள்களை மட்டுமே கொண்டிருந்த பதிப்பாகும். இதன் பிரதிகள் இலக்கிய வரலாற்றாசிரியர்களின் பார்வைக்கு கிடைக்காமல் போயிருக்கலாம். எனினும் க.தா.செல்வராசகோபால் என்ற இயற்பெயருடைய ஈழத்துப்பூராடனார் 1989 இல் இப்புராணத்தை இரண்டாவது முறையாகப் பதிப்பித்தார். முதலாவது பதிப்பு வெளிவந்து சுமார் ஒரு நூற்றாண்டுக்குப் பின் இரண்டாவது பதிப்பு வெளிவந்தது. இப்பதிப்பு ச. வயித்தியலிங்கம்பிள்ளையின் பதிப்பை அடியொற்றியே மேற்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு செய்யுளுக்கும் மிகச் சுருக்கமான விளக்கக்குறிப்புகள் எழுதப்பட்டுள்ளன. செய்யுள்களைத் தவிர்த்து இவ்விளக்கக் குறிப்புகளைத் படிக்கின்றபோது சீமந்தனி வரலாற்றை அறியலாம். ஆயினும் சீமந்தனி புராணத்தின் இலக்கிய நயத்தை நுகர அவ்விளக்கங்கள் போதுமானவையல்ல. கதையைத் தொடர் ஒழுங்கில் கூறிச்செல்வதிலேயே க.தா.செல்வராசகோபால் கவனம் செலுத்தியுள்ளார் எனலாம். உதாரணமாக,

> ''ஆங்கது முதலுமை யம்மை பாகனைத்
> தீங்கற வணங்கிநற் றிங்க ளோன்பினை
> பாங்கொடு புரிந்தனள் பத்தி யோடிசை
> மாங்குயி னிகர்த்தசொல் வழங்கு சீரினாள்''
> (க.தா.செல்வராசகோபால்,1989:64)

என்ற விரதச் சருக்கத்தில் வரும் இறுதிச் செய்யுளுக்கு 'மாக்குரல் அழகவல்லி சீமந்தனியும் மைத்ரேயி புகன்றபடி பக்தியோடும் விதிகளுடனும் அவ்விரதத்தை நோற்று வரலாயினள்' என்ற அளவிலேயே விளக்கம் தரப்பட்டுள்ளது. இங்கு செய்யுளில் பயின்று வந்துள்ள அருஞ்சொற்களுக்கான பொருளறிந்து முன்பின் கொண்டு சேர்த்து பொருளுரையாமையை அவதானிக்கலாம். 'இசைமாங்குயி னிகர்த்தசொல் வழங்கு சீரினாள்' என்ற செய்யுளடிக்கு 'மாக்குரல் அழகவல்லி சீமந்தனி' என்று பொருளுரைப்பது தவறாகும். தவிர, ஒரு வரியில் பொருளுரைக்கப்பட்ட செய்யுள்களும் இப்பதிப்பில் இடம்பெறுகின்றன. எது எவ்வாறாயினும் ச.வயித்தியலிங்கம்பிள்ளையின் முதலாவது பதிப்பில் இடம்பெற்றுள்ள செய்யுள்கள் அனைத்தும் இரண்டாவது பதிப்பிலும் இடம்பெறுகின்றன. அந்தவகையில் இவ்விரண்டாவது பதிப்பே இவ்வாய்விற்கு மூலமாக அமைகின்றது.

சீமந்தனி புராணத்தில் சோமவார விரதத்தின் சிறப்பு எடுத்துரைக்கப்படுகின்றது. பெண்கள் சோமவார விரதத்தைக் கடைப்பிடிப்பதால் கணவருக்கு நன்மைகள் கைகூடும் என்ற அடிப்படையான நம்பிக்கையை ஏற்படுத்தும் நோக்கில் புராணம் பாடப்பட்டுள்ளது. இதற்காகச் சீமந்தனி வரலாறு கூறப்படுகின்றது. சோமவார விரதத்தைக் கடைப்பிடித்ததன் பயனாகச் சீமந்தனி தனது கணவரின் உயிரைப் பாதுகாக்கிறாள். சீமந்தனியின் விரதத்தைக் குழப்புவதற்காகப் பெண்வேடம் தாங்கிச் சூழ்ச்சி செய்த சாமவான் பெண்ணாகவே மாறிவிடுகின்றான். இவ்விரு விடயங்களும் சோமவார விரதத்தின் மேன்மையை எடுத்துக்காட்டும் வகையில் புராணத்தில் இடம்பெறுகின்றன. தவிர, மைத்ரேயி சீமந்தனிக்குச் சோமவார விரதம் பற்றிக் கூறுகின்ற பகுதியில் விரதத்தைக் கடைப்பிடிக்கும் முறை, கடைப்பிடிப்பதால் ஏற்படும் பயன், தீரும் பாவங்கள் போன்ற சில விடயங்கள் விளக்கப்படுகின்றன.

**ஈழத்துப் புராண இலக்கியங்களும் சீமந்தனி புராணமும்**

தமிழ் நாட்டில் பெருமளவாகப் புராணங்கள் தோற்றம் பெற்ற காலப்பகுதியில் ஈழத்தில் யாழ்ப்பாணத் தமிழ் மன்னர் காலத்தில் தட்சண கைலாச புராணம், திருக்கரைசைப் புராணம், வியாக்கிரபாத புராணம் ஆகிய தல புராணங்கள் தோற்றம் பெற்றன. இவற்றில் முதலிரு புராணங்களும் முறையே திருக்கோணேஸ்வரம், திருக்கரைசயம்பதி ஆகிய சிவத்தலங்கள் பற்றியனவாகும். குறித்த தலங்கள் பற்றிய சிறப்புக்களை அதிகாரபூர்வமாக நிறுவத்தக்க வகையில் அதற்கேற்ற

செய்திகளைக் கூறுவதோடு தலத்துக்கு ஆதரவளித்த ஆட்சியாளரது திருப்பணிச் செயற்பாடுகளை விதந்துரைக்கும் பண்பை இப்புராணங்களில் காணலாம்.

தட்சணகைலாச புராணத்தின் ஆசிரியர் யாழ்ப்பாணத் தமிழ் மன்னர்களில் ஒருவரான சிங்கைச்செகராசசேகரன் ஆவார். இது பாயிரம் நீங்கலாக இலங்கை மண்டலச் சருக்கம், திருமலைச் சருக்கம், புவனோற்பத்திச் சருக்கம், அர்ச்சனாவிதிச் சருக்கம், மச்சாவதாரச் சருக்கம், தெரிசனாமுத்திச் சருக்கம், திருநகரச் சருக்கம் ஆகிய ஏழு சருக்கங்களில் அமைந்த 634 விருத்தப்பாக்களைக் கொண்டுள்ளது. திருகோணமலையைச் சார்ந்து வடமொழியில் தோற்றம்பெற்ற மச்சகேசுர புராணத்தைத் தழுவி இப்புராணம் ஆக்கப்பட்டுள்ளது. இறையாணைப்படி அகத்திய முனிவரால் மகாவலி கங்கைக் கரையில் ஸ்தாபிக்கப்பட்டதாகக் கருதப்படுகின்ற 'அகத்தியஸ்தாபனம்' என்றழைக்கப்படும் திருக்கரைசையம்பதியில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானின் சிறப்பைப் பாடுவது திருக்கரைசைப் புராணமாகும். இதனை உமாபதிச் சிவாச்சாரியாரின் சீடராய் விளங்கிய புலவர் ஒருவரே பாடினார் என்பதையும் வடமொழிப் புராணம் ஒன்றே இதற்கு மூலமாய் அமைந்துள்ளது என்பதையும் பாயிரப் பகுதியினூடாக அறிய முடிகின்றது. இப்புராணம் இலங்கைச் சருக்கம், கங்கைச் சருக்கம், தாபனச் சருக்கம், பூசைச் சருக்கம் ஆகிய நான்கு சருக்கங்களைக் கொண்டுள்ளது.

எழுபது வருடங்களுக்கும் மேலாக ஈழத்தில் சோழராட்சி நிலவியது. அக்காலத்தில் மேற்படி சிவாலயங்கள் உன்னத நிலையில் விளங்கின. சோழப் பேரரசின் நிலைகுலைவினால் இவ்வாலயங்கள் கவனிப்பாரற்றுப்போன பின்னணியில் மேற்படி புராணங்கள் இயற்றப்பட்டிருக்கலாம். ஆக, திருகோணமலைத் திருத்தலங்கள் பற்றி யாழப்பாணத் தமிழ் மன்னரும் தமிழ் நாட்டுப் புலவரும் புராணம் இயற்றியுள்ளமை கவனத்திற்குரியதாகும். அதேவேளை தமிழ் நாட்டிலுள்ள சிதம்பரம் என்னும் சிவத்தலம் பற்றியதான வியாக்கிரபாத புராணம் அளவட்டியில் பிறந்து பிற்காலத்தில் சிதம்பரத்திலும் வாழ்ந்த வைத்தியநாத தம்பிரானால் மேற்கொள்ளப்பட்ட வடமொழியிலுள்ள வியாக்கிரபாத மான்மியத்தின் மொழிபெயர்ப்பு என்று அறியப்படுகின்றது. அ. குமாரசுவாமிப் புலவர் இயற்றிய தமிழ்ப் புலவர் சரித்திரம் என்னும் நூலிலே இப்புராணத்துக்குரியதாக இரண்டு செய்யுள்கள் தரப்படுகின்றன(1951:190-191). இவ்வாறு பார்க்கும்போது யாழ்ப்பாணத் தமிழ் மன்னர் காலத்தில் இலங்கை முழுவதும் சைவ சமயம் உயர்நிலையில் இருந்தது என்பதையும் ஈழத்துச் சிவத்தலங்கள்மீது தமிழ் நாட்டுப் புலவர்களும் தமிழ் நாட்டுத்

தலங்கள்மீது ஈழத்துப் புலவர்களும் ஈடுபாடு கொண்டிருந்தனர் என்பதையும் அறிய முடிகின்றது.

யாழ்ப்பாணத் தமிழ் மன்னர்களிடமிருந்து போத்துக்கேயரிடம் ஆட்சியதிகாரம் கைமாறிய பின்பு ஞானானந்த புராணம் என்ற ஓர் இலக்கியம் தோன்றியதாகவும் அதன் ஆசிரியர் தொம்பிலிப்பு என்றும் அறியப்படுகின்றது. அது கத்தோலிக்க சமயச் சார்பானதாகவே இருக்க வேண்டும். ஏனெனில், பிற சமயங்கள்மீது காழ்ப்புணர்வுகொண்டிருந்த போத்துக்கேயரின் ஆட்சியதிகாரச் செல்வாக்கு மற்றைய சமயச் சார்பான இலக்கியம் தோன்றுவதற்குத் தடையாகவே இருந்திருக்கும்.

இந்து சமயத்துக்கு எதிராகக் கடும்போக்கைக் கொண்டிருந்த போத்துக்கேயரிடமிருந்து ஒல்லாந்தர் ஆட்சியைக் கைப்பற்றியதும் ஆலயங்களில் மக்கள் கூடி வழிபாடு செய்யும் சூழல் உருவானது. போத்துக்கேயர் காலத்தில் இடித்தழிக்கப்பட்ட சைவ ஆலயங்களை ஒல்லாந்தர் காலத்தில் புனரமைப்பு செய்யக்கூடிய சூழல் ஏற்பட்டது. அவ்வாலயங்களுக்கு வழிபாட்டுக்காக மக்களை ஆற்றுப்படுத்தும் வகையிலும் நெறிப்படுத்தும் வகையிலும் விரத புராணங்கள் தோற்றம் பெற்றன. அந்தவகையில் பிராமண குலத்தில் பிறந்த அ. வரதபண்டிதர் இயற்றிய பிள்ளையார் கதை, பிள்ளையார் புராணம், சிவராத்திரி புராணம், ஏகாதசி புராணம் முதலியன குறிப்பிடத்தக்கவையாகும். இந்து சமய மக்களின் பிரதான விரதங்களாகக் கருதப்படும் பிள்ளையார் ஷஷ்டி விரதம், சிவராத்திரி விரதம், ஏகாதசி விரதம் ஆகியவற்றின் மகிமையை விநாயகர், சிவன், திருமால் முதலியோரின் திருவிளையாடல்கள், அற்புதங்கள், இப்புராணங்களை அனுட்டித்துப் பயன் பெற்றவர்களின் வரலாறுகள் முதலியவற்றைத் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் பாடியுள்ளார். இப்புராணங்கள் மக்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்கினைப் பெற்றிருந்தன. பிள்ளையார் கதையில் இடம்பெறும்

> ‘‘கற்றவரும் நோற்றவரும் காதலித்துக் கேட்டவரும்
> பெற்றிடுவர் கற்பகத்தின் பேறு’’

> ‘‘நோற்றார் மிக வாழ்வார் நோலா தருகிருந்து
> கேட்டோர்க்கும் வாராது கேடு’’

போன்ற நூற்பயன் செய்யுட்களால் இதனை விளங்கிக்கொள்ளலாம். ஒல்லாந்தர் காலத்தில் காணப்பட்ட உடனடிச் சமயத் தேவையின் நிமித்தம் ஆலயங்களிலே படித்துப் பாராயணம் செய்யத்தக்க வகையில் அகவல் யாப்பில் பிள்ளையார் கதையை எழுதிய அ. வரதபண்டிதர் பெரும்பாலும் அதே விடயத்தைப் பிள்ளையார்

புராணத்தில் விருத்த யாப்பில் பாடியுள்ளார். இது புராண படன மரபை மனங்கொண்டு அ. வரதபண்டிதரால் மேற்கொள்ளப்பட்ட முயற்சியாகும் (எஸ்.சிவலிங்கராஜா,2009:74-75). புராண படன மரபு பிராமணர்களோடும் புலமைத்துவத்தோடும் தொடர்புபட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சிவராத்திரி புராணத்தில் சிவராத்திரி விரதத்தை அனுட்டிக்கும் முறையும் இவ்விரதத்தால் பயனடைந்த சுகுமாரன், அங்குலன், சவுமினி, சன்மாடபாதன், விபரிசன் ஆகியோரின் சரிதமும் விரித்துரைக்கப்படுகின்றது. அதேபோல ஏகாதசி புராணம் ஏகாதசி விரத நிர்ணயத்தையும் மகிமையையும் அவ்விரதத்தை அனுட்டித்தோர் சரிதங்களையும் கூறுகின்றது. மேற்படி விரத புராணங்கள் வடமொழிப் புராணங்களைத் தழுவி ஆக்கப்பட்டவை என்பதை அகச்சான்றுகள் மூலம் அறிய முடிகின்றது. தவிர, ஒல்லாந்தர் காலத்தில் கிறிஸ்தவ சமயப் பொருளை உள்ளடக்கியதாக யோசேப்பு புராணம் தோற்றம் பெற்றது. இதன் ஆசிரியர் கூழங்கைத் தம்பிரான் ஆவார். 21 படலங்களையும் 1023 விருத்தங்களையும் கொண்டதென்றும் அறியப்படுகின்றபோதும் ஐந்து பாடல்கள் மட்டுமே கிடைக்கப்பெறுகின்றன.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட நவீனத்துவ மாற்றங்களின் பின்னணியில் சுய பண்பாட்டுப் பிரக்ஞையின் வெளிப்பாடாகப் புராணம் என்ற இலக்கிய வடிவத்துக்குள் சமூகம்சார் கருத்துக்கள் பாடுபொருளாக்கப்பட்டன. கனகி புராணம், தால புராணம், கோட்டுப் புராணம், சாதிநிர்ணய புராணம் ஆகிய புராணங்கள் சமூக பண்பாட்டுப் பிரக்ஞையின் வெளிப்பாடாகத் தோற்றம்பெற்றவையாகும். இவற்றை முறையே நட்டுவச் சுப்பையனார், நீ. காசிநாதப் புலவர், வே. இராமலிங்கம், ச. வைத்தியலிங்கம்பிள்ளை ஆகியோர் பாடியுள்ளனர். இவையாவும் யாழ்ப்பாணப் பிரதேசத்தை மையமாகக்கொண்டு தோன்றியவையாகும். கனகி புராணம் பிரபுக்களின் ஒழுக்கக்கேட்டை நகைச்சுவையுணர்வுடன் சுட்டிக்காட்டுகின்றது. வண்ணார்பண்ணைச் சிவன் கோயில் தேவதாசிகளில் ஒருத்தியான கனகியிடம் வந்துபோகும் பிரபுக்களை ஊரும் பேரும் சுட்டி விமர்சிக்கிறது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் சமூக, பொருளாதார, பண்பாட்டு அம்சங்களில் ஏற்பட்ட மாற்றங்களினால் மக்களின் அன்றாட வாழ்க்கைக்குப் பயன்பட்டு வந்த பனையின் பயன்பாடு குறைவடைந்ததன் பின்னணியில் பனையின் மகத்துவத்தைப் புலப்படுத்தும் வகையில் தல புராணம் தோற்றம் பெற்றது. நீதிமன்றங்களைத் தொழிலின் நிமித்தம் வழிப்படுத்துபவர்களின் தொல்லைகளையும் அவற்றால் ஏற்படும் அவலங்களையும் சகிக்காத நிலையில் அவற்றைச் சித்தரிக்கும் வகையில் கோட்டுப் புராணம்

பாடப்பட்டது. சாதிப்பாகுபாடுகளால் சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளையும் பிரச்சினைகளையும் சித்திரிப்பது சாதிநிர்ணய புராணமாகும்.

இவ்வாறு ஈழத்துப் புராண இலக்கியம் சமூகப் பிரச்சினைகளைப் பாடுபவையாகப் பொருள் மாற்றம் பெறும் காலப் பகுதியிலேயே சீமந்தனி புராணம் மட்டக்களப்பில் தோற்றம் பெறுகின்றது. இப்புராணம் சோமவார விரதத்தைப் பற்றியதே தவிர ஒல்லாந்தர் கால விரத புராணங்களைப்போல ஆலய வழிபாட்டுடன் நேரடித் தொடர்புடையதல்ல. ஒல்லாந்தர் காலத்தில் தோற்றம்பெற்ற புராண இலக்கியங்கள் ஆலயங்களை மையமாக வைத்துப் பயின்று வந்தமையால் பரவலாக எல்லோராலும் அறியப்பட்டன. அத்தகைய பயில்நிலை சீமந்தனி புராணத்திற்கு இல்லாமையால் பலராலும் அறியப்படாமல்போயிருக்கலாம். ஆக, பத்தொன்பதாம் நூற்றாண்டுப் புராண இலக்கியப் பொருள்மரபிலிருந்து வேறுபடுகின்ற அதேவேளை ஏற்கனவே தோன்றிய விரத புராணங்களின் தன்மைகளிலிருந்தும் வேறுபட்டதான போக்கைச் சீமந்தனி புராணத்தில் காணலாம்.

ஈழத்தில் தோன்றிய தல புராணங்களும், விரத புராணங்களும் வடமொழிப் புராண இலக்கியச் செல்வாக்கிற்குட்பட்டவையாகவும் காவியப் பண்பு தழுவியவையாகவும் உள்ளமையை அவதானிக்கலாம். இப்பண்புகளை சீமந்தனி புராணத்திலும் அவதானிக்க முடிகிறது. சீமந்தனி புராணம் வடமொழியின் மொழிபெயர்ப்பாக இருக்கலாம் என்றும் பதினெட்டாம் நூற்றாண்டில் அச்சிடப்பெற்று வழக்கிலிருந்த முத்துக்குமாரர் என்பவரின் சீமந்தனி நாடகத்தின் தழுவலாக இருக்கலாம் என்றும் கூறப்படுகின்றன(க.தா.செல்வராசகோபால், 1989:ix). ஆயினும்,

> ‘‘பொருவிறவ வியாசன்முன முரைப்பக் கேட்டுப்
> புராணமுனி புகன்ற சிவகதை தம்மிற்
> சுருதிமுத லாகமங்க ளனைத்துங் கூறுஞ்
> சுடர்மதிநாள் விரதமதை மேனா ளோற்றுப்
> பெருகுநலம் படைத்தவரிற் பெரும்பேறுற்ற
> பெட்புயர்சீ மந்தனியின் பிறங்கு காதை
> வருமுறைமற் றறிந்தளவி லுரைப்பாங் கேண்மின்
> வையகத்தீர் மங்களம்பெற் றிதமாய் வாழ்வீர்’’
>
> (க.தா.செல்வராசகோபால்,1989:7)

என்னும் பாயிரச் செய்யுளை ஆதாரங்காட்டி சூதமுனிவர் கூறிய கதையை அடிப்படையாகக்கொண்டு ச. பூபாலப்பிள்ளை சீமந்தனி புராணத்தினை விரித்துரைக்கிறார் என்று எப்.எக்ஸ்.ஸி. நடராசா குறிப்பிடுகின்றார் (2012:118).

> "………பிரமோத் தரகாண்ட முதலபன்னூல் செப்பிநின்ற
> மருந்தன்சீ மந்தனிதன் சரிதமற வகையிசைத்து வகுத்தான் மாதோ"
>
> (க.தா.செல்வராசகோபால்,1989:1)

என்று ச.வயித்தியலிங்கம்பிள்ளை சிறப்புப் பாயிரத்தில் பாடுகின்றார். இவற்றினூடாகச் சீமந்தனி புராணம் சூதமுனிவர் கூறிய கதையை அடிப்படையாகக்கொண்டு இயற்றப்பட்டது என்பதையும் பிரமோத்தர காண்டம் முதலான பழைய நூல்களில் சொல்லப்பட்ட சீமந்தனி கதையை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்டது என்பதையும் அறிய முடிகின்றது. ஈழத்தில் தோற்றம் பெற்ற தல புராணங்களும் விரத புராணங்களும் பெரும்பாலும் சூதமுனிவர் கூறிய கதையை அடிப்படையாகக்கொண்டு பாடப்பட்டதாகவே அறியப்படுகின்றது.

அதர்வ வேதம், பிருகதாரண்யக உபநிடதம் போன்றவற்றில் புராணங்கள் தெய்வீகமானவை என்ற குறிப்புகள் காணப்படுகின்றன. அவற்றில் சூதர் என்ற ரோமஹர்ஷணரே புராணக் கதைகளைச் சொன்னாரென்று சொல்லப்படுகின்றது. அவர் வியாசரிடமிருந்து அவற்றைக் கேட்டார் என்றும் முன்னே அவற்றை வியாசருக்கு இறைவன் உபதேசஞ் செய்தார் என்றும் சொல்லப்படுகின்றது. இவ்வாறு சொல்லப்பட்ட வடமொழிப் புராணங்களின் குறிப்பிட்ட சில பகுதிகளைத் தழுவித் தமிழில் ஆக்கப்பட்ட புராணங்களை உபதேச காண்டம், பிரமோத்தர காண்டம், வாயு சங்கிதை, காசி காண்டம் என நான்கு பிரிவிலடக்குவர்(சி. பத்மநாதன், 2009:230). இவ்வாறு தமிழில் புராணங்களை இயற்றியோர் தமது புராணம் சூதமுனிவர் கூறிய கதையைப் பின்பற்றியது என்று கூறுவது மரபாகவுள்ளது என்று அமைதி கண்டாலும் சீமந்தனி புராணத்தின் ஆசிரியருக்கு வேதங்களிலும் உபநிடதங்களிலும் புராணங்களிலுமிருந்த ஈடுபாட்டை மறுப்பதற்கில்லை. சீமந்தனி புராணத்தில் சீமந்தனிக்கு சோமவார விரதத்தினைப் பற்றியும் அதனைக் கடைப்பிடிக்கும் முறைகளைப் பற்றியும் விளக்கிக் கூறுவதற்காக மைத்ரேயி என்றொரு பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது. இவரது கணவர் யாஞ்ஞவல்கியர். உபநிடதங்களில் யாஞ்ஞவல்கிய முனிவருக்கும் மைத்ரேயிக்கும் இடையில் பல்வேறு உரையாடல்கள் இடம்பெறுகின்றன. இவ்வுரையாடல்கள் முக்கியமானவை. குறிப்பாக

இவ்வுரையாடல்கள் பிரமம், ஆன்மா பற்றிய விளக்கங்களையும் தத்துவக் கருத்துக்களையும் வெளிப்படுத்துபவையாகும்(க.கைலாசநாதக் குருக்கள், 2010:158). இவ்வாறு நோக்கும்போது வடமொழிப்புராண மரபிலிருந்து தொடர்ந்து வருகின்ற ஒரு தெய்வக்கதையே சீமந்தனி புராணத்தின் மூலமாக இருப்பது தெளிவாகின்றது. கதை மட்டுமன்றி பாத்திரங்களின் பெயர்கள்கூட வேதங்களிலும் உபநிடதங்களிலும் புராணங்களிலுமிருந்து பெறப்பட்டுள்ளன என்று ஊகிப்பதற்கு இடமிருக்கின்றது.

காப்பியம் பாடுவதற்கென்றே சிறப்பாகவமைந்த விருத்தப்பா யாப்பில் சீமந்தனி புராணம் பாடப்பட்டுள்ளது. இதன் உட்பிரிவுகள் சருக்கங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. சோமவார விரதத்தின் மேன்மையை எடுத்துக்கூறுவதே இதன் பாவிகமாகவிருப்பினும் அவ்விரதம் பற்றிய விடயங்கள் புராணத்தில் இடம்பிடித்திருப்பதைவிட அரசகுல வரலாறும் அரசாட்சியும் காப்பிய நோக்கில் பாடப்பட்டுள்ளன. அந்தவகையில் சீமந்தனி பிறந்த ஆரியவர்த்த நாட்டினதும் சந்திராங்கதன் பிறந்த நிடத நாட்டினதும் வளம் சிறப்பாகப் பாடப்பட்டுள்ளது. சீமந்தனியின் தந்தையான சித்திரவர்மன் ஆட்சி செய்யும் ஆரியவர்த்தம் என்னும் நாட்டின் நீர் வளம், நகர் வளம் என்பன ஆரியவர்த்தச் சருக்கம் முழுவதும் சிறப்பாகப் பாடப்படுகின்றன. இதேபோன்று சந்திராங்கதச் சருக்கத்தில் நிடத நாட்டினுடைய சிறப்புகள் பாடப்படுகின்றன. இப்பகுதிகளில் இன்பம் பயக்கும் பல செய்யுட்கள் காணப்படுகின்றன. காவிய மரபுக்கே உரித்தான காதல் பரவச நிலையினையும் இப்புராணத்தில் காணலாம்.

> ‘‘ஐயிரு வயது மிவ்வா றகன்றிட வரசி யோர்நாட்
> செய்யரி பரந்த மைக்கட் சிலதியர் மருங்கு சூழ
> மையுறு நறுங்கா வேகி மலர்த்தடஞ் சுனைக ளாடிக்
> கொய்யலர் தொடுத்து மேகக் கூந்தலி லிலங்க வேய்ந்து’’
>
> (க.தா.செல்வராசகோபால்,1989:34)

என்ற செய்யுளில் சீமந்தனி தனது பத்தாவது வயதில் தனது தோழிமாருடன் பூங்காவிற்குச் சென்று மலர்களைப் பறித்தும் நுகர்ந்தும் மகிழ்ந்தும் அனுபவித்தும் நீராடிக் களிப்பதும் கூறப்படுகின்றது. அப்பூங்காவிலேயே சீமந்தனியும் சந்திராங்கதனும் சந்திக்கின்றனர். அவர்களுடைய காதல் உணர்வும் காதல் தவிப்பும் சிறப்பாகப் பாடப்பட்டுள்ளது.

> ‘‘நிறைவளங்கூர் செல்வ நிடதத்தார் கோமற்கிங்
> குறுதுயரைத் தீரா தொளித்தாய் வருதியெனச்
> சிறையெனுங்கை தட்டிவிளி சேவற் குரல்கேட்டுக்

கறையகல வானிற் கதிரோனும் வந்துதித்தான்''
(க.தா.செல்வராசகோபால்,1989:85)

என்ற செய்யுளில் சந்திராங்கதனின் காதல் தவிப்பைக் காட்டுவதற்குக் கையாளப்பட்டுள்ள தற்குறிப்பேற்றம் சிறப்பானது.

விவாகச் சருக்கம் சீமந்தனியின் சுயம்வரம் பற்றிய விவரணமாக அமைந்துள்ளது. சீமந்தனியின் சுயம்வரத்தில் கலந்துகொள்வதற்காக சந்திராங்கதன் அரண்மனைக்குள் நுழைந்ததும் அவனைச் சித்திரசேனன் காணுகின்ற சந்தர்ப்பத்தை,

''அங்கவன்மெய்த் திருவனப்பு மரசர்களின் றலைகவிழ்ப்பு
மங்கைதனை பெறுமரசன் மகிழ்வினொடு கண்டனன்''
(க.தா.செல்வராசகோபால்,1989:102)

என்று புலவர் பாடுகின்றார். சந்திராங்கதனைக் கண்டதும் சுயம்வரத்துக்கு வந்திருந்த மற்றைய அரசர்களின் தலைகள் கவிழ்ந்தன என்று புலவர் பாடுவது சந்திராங்கதனைத் தன்னிகரில்லாத் தலைவனாகச் சித்திரிக்கும் உத்தியாகும். பகையரசர்களைப் போரில் வென்று பறிபோன நாட்டையும் பெற்றோரையும் மீட்டமை அவனுடைய வீரத்தை எடுத்துக்காட்டுகின்றது.

தல புராணங்களும் விரத புராணங்களும் ஆக்க முறைமையில் காவியத் தன்மையைப் பெற்றிருப்பினும் காவியத்துக்குரிய செறிவான கதைப்பின்னலை அவற்றில் காண முடியாது. சீமந்தனி புராணத்தில் சோமவார விரதத்தைக் கடைப்பிடித்துப் பயனடைந்த சீமந்தனியின் வரலாறே சொல்லப்படுகிறதாயினும் அக்கதை பின்னப்பட்டிருக்கிற முறையிலும் சொல்லப்பட்டிருக்கிற முறையிலும் காவியத்துக்கேயுரித்தான கவித்துவம் வெளிப்படுகிறது. அற்புத நவிற்சி, தற்குறிப்பேற்றம் போன்ற உத்திகள் கவித்துவ வெளிப்பாட்டுக்கு உதவுகின்றன.

தொகுத்து நோக்கும்போது சீமந்தனி புராணம் பத்தொன்பதாம் நூற்றாண்டுப் புராண இலக்கியப் பொருள் மரபிலிருந்து வேறுபடுவதையும் அதற்கு முற்பட்ட காலங்களில் தோற்றம் பெற்ற தல புராணம், விரத புராணம் ஆகியவற்றின் ஆக்கமுறைமையோடு ஒத்துச் செல்வதையும் அவதானிக்கலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழத்தில் ஏற்பட்ட நவீனத்துவ மாற்றங்கள் எல்லாப் பிரதேசங்களிலும் சம காலத்தில் ஏற்படாமை சீமந்தனி புராணம் சமகாலப் புராண இலக்கியப் பொருள்மரபிலிருந்து வேறுபடுவதற்கான காரணமாகலாம். ஆங்கிலக் கல்வி, அதன் மூலமான மேனாட்டு

நாகரிகப் பரவல் போன்ற நவீனத்துவ மாற்றங்கள் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் ஏற்பட்ட பின்பே மட்டக்களப்புப் பிரதேசத்தில் ஏற்படத்தொடங்கியது (கா.சிவத்தம்பி,1978:144). இதனாலேயே மட்டக்களப்புப் பிரதேசத்தில் தோன்றிய சீமந்தனி புராணம் சமகாலத்தில் யாழ்ப்பாணப் புராண இலக்கியப் பொருள்மரபிலிருந்து வேறுபடுகின்றது எனலாம். ஏனெனில் பண்பாட்டுப் பிரச்சினைகளை வெளிக்கொணரும் வகையில் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் புராணங்கள் தோன்றியமைக்கு ஆங்கிலக் கல்வியும் அக்கல்வியூடான மேனாட்டு நாகரிகப் பரவலுமே காரணமாகும். ச.பூபாலப்பிள்ளை ஆங்கிலக் கல்வியைப் பெற்றிருந்தாலும் அக்கல்வியூடாகச் சமூகத்தில் ஏற்பட்ட பண்பாட்டு நெருக்கடிகளை எதிர்நோக்கவில்லை எனலாம். இந்நிலையில் சமயப் பொருளாராய்ச்சிகளிலே ஈடுபட்டிருந்த ச.பூபாலப்பிள்ளை தனக்கிருந்த பழந்தமிழ் இலக்கியப் பயிற்சியின் துணையால் சீமந்தனி புராணத்தை ஆக்கியுள்ளார் எனக் கருதலாம்.

**முடிவுரை**

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மட்டக்களப்பில் தோற்றம் பெற்ற சீமந்தனி புராணம் ஈழத்தில் தோன்றிய புராண இலக்கியங்களின் வரிசையில் வித்தியாசமானதாகும். புராணம் சோமவார விரதம் பற்றியதாயினும் ஆலய வழிபாட்டோடு நேரடித் தொடர்பற்றதாகலின் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெறாமல் போயிருக்கலாம். எனினும், பழந்தமிழ் இலக்கியப் பண்புகள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ள இப்புராண இலக்கியம் ஈழத்து இலக்கிய வரலாற்றில் காணப்பட்ட புலமைத்துவத்துக்கு ஒரு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. அதேவேளை ஈழத்துப் புராண இலக்கியங்களைக் கிடைநிலையிலும் செங்குத்து நிலையிலும் வைத்துப் பகுப்பாய்வு செய்கின்றபோது ஈழத்துப் புராண இலக்கியச் செல்நெறியில் தென்படாத ஒரு புதிய போக்கு மேற்கிளம்புவதை அவதானிக்கலாம்.

**உசாத்துணைகள்**

1. அகிலேசபிள்ளை வே. (பதிப்பாசிரியர்), (1893), திருக்கரைசைப் புராணம் மூலமும் அ.குமாரசுவாமிப் புலவர் செய்த பொழிப்புரையும், திருகோணமலை.
2. கந்தையா வி.சீ., (1964), மட்டக்களப்புத் தமிழகம், யாழ்ப்பாணம் : ஈழகேசரிப் பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம்
3. குகன் கோ., (2022), "ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் சீமந்தனி புராணம் : ஓர் அறிமுகம்", ஈழத்துத் தமிழியல் மரபும் மாற்றமும் - ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பு,

மூன்றாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாடு, ம.இரகுநாதன், ஈ.குமரன் (பதிப்பாசிரியர்கள்), தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

4. ……………., (2016), "ச. பூபாலனாரின் தமிழ்ப் பணிகள்", உ.வே. சாமிநாதையரும் பத்தொன்தாம் நூற்றாண்டுத் தமிழறிஞர்களும் - தொகுதி ஹை, க. முருகேசன், சு. குமரன், வ. மகேஸ்வரன் (பதிப்பாசிரியர்கள்), கோயம்புத்தூர் : தமிழ்த்துறை, கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி.
5. குமரன் ஈ., (2010), "விஜயநகர நாயக்கர்காலப் புராணங்களும் தலபுராணங்களும்", விஜயநகரப் பேரரசும் கலாசார மறுமலர்ச்சியும், சி. பத்மநாதன், க. இரகுபரன், ஸ்ரீ. பிரசாந்தன் (பதிப்பாசிரியர்கள்), கொழும்பு : இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.
6. குமாரசுவாமிப் புலவர் அ., (1951), தமிழ்ப்புலவர் சரித்திரம், சுண்ணாகம் : புலவரகம்
7. கைலாசநாதக்குருக்கள் கா., (2010), வடமொழி இலக்கிய வரலாறு, நாகர்கோவில் : காலச்சுவடு பதிப்பகம்
8. சிவத்தம்பி கா., (1978), தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும், சென்னை : தமிழ்ப் புத்தகாலயம்
9. சிவலிங்கராஜா எஸ்., (2009), ஈழத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறி, கொழும்பு – சென்னை : குமரன் புத்தக இல்லம்
10. சுப்பிரமணியன் நா., (2005), "ஈழத்துத் தமிழிலக்கியத்தின் தோற்றமும் தொடர்ச்சியும்", கௌசல்யா சுப்பிரமணியன் (பதிப்பாசிரியர்), சென்னை: மாணவர் நகலகம்.
11. செபரத்தினம் க., (2002), ஈழத்துத் தமிழ்ச் சான்றோர், சென்னை: மணிமேகலைப் பிரசுரம்
12. செல்வராசகோபால் க.தா. (பதிப்பும் உரையும்), (1989), சீமந்தனி புராணம், கனடா : நிழல் வெளியீடு
13. நடராசா எப்.எக்ஸ்.ஸி. (2012), ஈழத்துத் தமிழ்நூல் வரலாறு, கொழும்பு – சென்னை : குமரன் புத்தக இல்லம்
14. பத்மநாதன் சி.(பிரதம பதிப்பாசிரியர்) க. இரகுபரன், தேவகுமாரி ஹரன் (உதவிப் பதிப்பாசிரியர்கள்) சாந்தி நாவுக்கரசன்(நிர்வாக ஆசிரியர்), (2009), இந்துக் கலைக்களஞ்சியம் - தொகுதி 10, கொழும்பு : இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.
15. வரதபண்டிதர் அ., (1990), பிள்ளையார் கதை, யாழ்ப்பாணம் : சோதிட விலாச புத்தகசாலை
16. ………………., (1970), சிவராத்திரி புராணம், யாழ்ப்பாணம் : ஸ்ரீகாந்தா அச்சக வெளியீடு
17. ………………., (1947), பிள்ளையார் புராணம் - மூலமும் உரையும், யாழ்ப்பாணம் : ஸ்ரீ லலிதா விலாஸ் புத்தகசாலை